# பொதுக்காலம் 23ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அன்பிற்குரியவர்களே, பொதுக்காலம் 23-ம் ஞாயிறு வழிபாட்டிற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம். நிலையற்ற மனிதரின் எண்ணங்கள் பயனற்றவை என பல முறை நாம் வாசிக்கக் கேட்டிருந்தாலும் வீணான எண்ணங்களாலும் செயல்களாலும் நமது உடலெனும் மண் கூடாரத்தை கட்டியெழுப்ப நாம் முற்படுகிறோம். பாவம் எனும் அடிமைத்தளையிலிருந்து விடுபட நாம் முயல்கிறோமா? நிலையற்ற இந்த உலகம் நம்மை சுயநலம், சிற்றின்பம் என்னும் மாய வலையில் சிக்க வைத்து வேடிக்கை பார்க்கின்றது. ஆனால் நிலையான பேரின்பத்தைச் சுவைத்து மகிழ இன்றைய வாசகங்கள் வழியாக இறைவன் நமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

எனவே நமது அன்றாட வாழ்வில் கடவுளை முதன்மையாகக் கொண்டு அவருக்கு உகந்தவற்றை கற்றுக்கொண்டு இறைச் சித்தத்திற்கு ஏற்ப வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்..

## முதல் வாசக முன்னுரை (சாலமோனின் ஞானம் 9: 13-18)

கடவுளின் திட்டத்தை அறிவர் யார்? ஆண்டவரின் திருவுளத்தை கண்டுபிடிப்பவர் யார்? இவ்வுலகில் நாம் பெற்றுக் கொண்ட ஞானம் அனைத்தும் தூய ஆவியின் கொடைகளாலன்றி நமது வீணான எண்ணங்களால் அல்ல என உணர்த்த சாலமோனின் ஞான ஆகம நூலின் வார்த்தைகள் நமக்கு எடுத்துரைக்கின்றது. இறை வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்

## இரண்டாம் வாசக முன்னுரை (பிலமோன் 9b-10, 12-17)

கிறிஸ்துவின் பொருட்டு கைதியாயிருந்த தூய பவுல் சிறையில் தான் இருப்பதை குறிப்பிட்டாலும் கிறிஸ்துவின் அன்புச் சிறைக்குள் கைதியாக்கப் பட்டிருக்கின்றார் என்று அர்த்தம் கொள்ளலாம். ஒனேசிமு மனம் மாறியவுடன் அவனை “நான் ஈன்றெடுத்த பிள்ளை” என்று வர்ணிக்கிறார். கிறிஸ்தவ அன்பு ஒருவரை ஒருவர் இணைக்கும் பாலமாக அவைய வேண்டும் என இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் நமக்கு எடுத்துரைக்கிறார்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பும் அருளும் நிறைந்தவரே எம் இறைவா!

நற்செய்தியின் பணியாளர்களாக நீர் ஏற்படுத்திய திரு அவைத் தலைவர், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் உம்மிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஞானத்தினாலும், ஆற்றலாலும் இறைமக்களை உமக்கு உகந்தவர்களாக மாற்றி வழிநடத்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பும் இரக்கமும் நிறைந்தவரே எம் இறைவா!

எங்களை ஆளும் நாட்டுத் தலைவர்கள் தங்கள் கடமைகளை நன்கு உணர்ந்தவர்களாய், சுய வெறுப்பு விறுப்புகளுக்கு இடம் கொடாமலும், சாதி, மதம் இனம் மொழி என அனைத்து வேற்றுமைகளையும் தாண்டி அனைவரையும் சமமாக பாவித்து மக்கள் சேவையாற்ற வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா!

எங்கள் வாழ்வில் நாங்கள் பெற்றுக்கொண்ட அனைத்து கொடைகளும் இறைவா உமது அருள் ஆற்றலினால் கிடைத்தவை என்பதை ஒருபோதும் மறவாமல், நிலையான உமது பேரன்பில் நிலைத்து, வாழ்வின் சுமைகளை உம்மோடு சேர்ந்து சுமக்கவும், உம் பாதச் சுவடுகளை பின்பற்றி வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

4. இரக்கம் நிறைந்தவரே எம் இறைவா!

நாடு செழித்திட நல்வாழ்வு பெற்றிட வரமருளும். வாழ்வாதாரத்திற்காக உம்மிடம் கையேந்தும் ஏழை, எளிய மக்களை கண்ணோக்கியருளும். வலுவற்றவர்களை தேர்ந்தெடுத்து உதவி செய்தீரே. எங்களோடு பயணிக்கும் வீழ்ந்தோரையும் சோர்ந்தோரையும் தேடிச் சென்று உதவிடவும், அயலானில் உம்மைக் கண்டு வாழவும் வரமருள வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. வாழ்வளிப்பவரே எம் இறைவா!

எம் வாலிபச் செல்வங்களை உம் பாதம் அர்ப்பணிக்கின்றோம். ஊடகங்களும், தொலைத் தொடர்பு சாதனங்களும் காட்டும் வழியே சிறந்தது என நினைத்து, கடவுளை தேட எந்த முயற்சியும் எடுக்காமல், எல்லாம் எங்களுக்கு தெரியும் என்ற அவர்களின் எண்ணத்தை மாற்றி கொண்டு, ஞானத்தின் ஊற்றாகிய உம்மை பற்றிக் கொண்டு நாட்டிற்கும் வீட்டிற்கும் பலனளிக்கும் பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: திருமதி. ஜெயின் வேலாயுதம், புளியரை, செங்கோட்டை மறைப்பணித்தளம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com